# வேலணை பிரதேச சபை

## மாதாந்த சபைக் கூட்டம் 17.11.2022

வேலணை பிரதேச சபையின் மாதாந்த கூட்டமானது 17.11.2022 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கௌரவ தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி அவர்களின் தலைமையில் இரண்டு நிமிட மௌன இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. இதில் பின்வருவோர் கலந்து கொண்டிருந்தனர்.

| | | |
|---|---|---|
| 01. கௌரவ தவிசாளர் | – | நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி |
| 02. கௌரவ உப தவிசாளர் | – | பொன்னம்பலம் நடனசிகாமணி |
| 03. கௌரவ உறுப்பினர் | – | சின்னையா சிவராசா |
| 04. கௌரவ உறுப்பினர் | – | பரமேஸ்வரன் மகிந்தன் |
| 05. கௌரவ உறுப்பினர் | – | செல்லப்பா பார்த்தீபன் |
| 06. கௌரவ உறுப்பினர் | – | பிலிப் பிரான்சிஸ் |
| 07. கௌரவ உறுப்பினர் | – | அருளானந்தம் ஸ்ரீபத்மராசா |
| 08. கௌரவ உறுப்பினர் | – | தியாகராசா ஹேமதாஸ் |
| 09. கௌரவ உறுப்பினர் | – | பாலச்சந்திரன் ஜனார்த்தனன் |
| 10. கௌரவ உறுப்பினர் | – | சிவலிங்கம் அசோக்குமார் |
| 11. கௌரவ உறுப்பினர் | – | கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன் |
| 12. கௌரவ உறுப்பினர் | – | யசோதினி சாந்தகுமார் |
| 13. கௌரவ உறுப்பினர் | – | கருணாகரன் நாவலன் |
| 14. கௌரவ உறுப்பினர் | – | மகேந்திரராசா தவரூபன் |
| 15. கௌரவ உறுப்பினர் | – | அன்ரனி அமிர்தநாதர் மேரி மற்றில்டா |
| 16. கௌரவ உறுப்பினர் | – | அனுஷியா ஜெயகாந்த் |
| 17. கௌரவ உறுப்பினர் | – | வரதராசா கஜீபன் |
| 18. கௌரவ உறுப்பினர் | – | சுவாமிநாதன் பிரகலாதன் |
| 19. கௌரவ உறுப்பினர் | – | எட்வர்ட் மேரி அலன் |
| 20. கௌரவ உறுப்பினர் | – | வல்லிபுரம் நாவேந்தன் |
| 21. செயலாளர் | – | திரு.தி.தியாகச்சந்திரன் |

கூட்ட அறிக்கையின் முதல் அம்சமாக கௌரவ தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி அவர்களால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது. தலைமை உரையின்போது கௌரவ தவிசாளர் அவர்கள் தனியார் பௌசர் உரிமையாளர்களை அழைத்தபோது இருவர் மட்டும் வருகை தந்திருந்ததாகவும் அவர்களுடன் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார். மக்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு ஒலிபெருக்கி மூலமான அறிவித்தலை செய்துள்ளதாகவும் தெரிவித்தார். இதன்போது கால்நடைகளின் நடமாட்டத்தால் வீதிப் போக்குவரத்து செய்ய முடியாதளவு நிலைமை உள்ளதாகவும்

அவ்வாறான கால்நடைகளையாவது பிரதேச சபை பிடிக்கவேண்டும் என சில உறுப்பினர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் பெயரிடப்படாத வீதிகளுக்கு பெயர் வைப்பது தொடர்பாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். இதன்போது கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் பெயரிடப்படாத வீதிகளுக்கு பெயரிட்டு சபைக்கு சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளை செய்யுமாறு சமாசத்துக்கு கடிதம் அனுப்புமாறு தன்னால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதை நினைவுபடுத்தினார்.

தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் சாட்டியில் வரையறுக்கப்பட்ட அளவில் குடிநீரை ஏற்றுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். வங்களாவடியில் பிரதேச சபையால் கழிவகற்றும் செயற்பாடானது ஒழுங்காக இடம்பெறுவதாக தெரிவித்தார். அல்லைப்பிட்டி ஊடாக அரச பேரூந்து சேவை விரைவில் இடம்பெறும் என நம்பிக்கை தெரிவித்தார். சட்ட விரோதமாக பனை மரங்கள் தறிக்கப்படுவதை கட்டுப்படுத்துமாறு பிரதேச செயலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். வேலணை பொது வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பற்றைக் காணிகளில் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மண்டைதீவு சுற்றுலா மையத்துக்கான கேள்வி அறிவித்தல் விடப்பட்டு ஒருவர் விண்ணப்பம் செய்துள்ளதுடன் அவருக்கே ஒப்பந்தம் கிடைக்கவுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் வங்களாவடி கடைத்தொகுதி பற்றி பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக அறியப்படுத்தியதுடன் அதற்கு கௌரவ தவிசாளரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும் வினாவெழுப்பினார். இதனைத் தொடர்ந்து வங்களாவடி கடைத்தொகுதியை ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்களுக்கே வழங்குவது தொடர்பாக சபையில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டது.

தொடர்ந்தும் கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்களுக்கே உரிமை மாற்றம் செய்து வழங்குவதற்கான கால அவகாசம் இருந்தும் அதனை பிரதேச சபை செய்யவில்லை என தெரிவித்தார். மேலும் ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்களுக்கு கடைகளை வழங்கிய பின்னரே கடைத்தொகுதியை திறக்க வேண்டும் என்பதுடன் அதுவரை தற்போது கடையை வழங்குமாறு அனுமதி கிடைத்தவருக்கும் கடையை வழங்கவேண்டாம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சின்னையா சிவராசா அவர்கள் கடைத்தொகுதியை ஏற்கனவே நடாத்தியவர்களுக்கே வழங்குவது பற்றி தான் உள்ளூராட்சி ஆணையாளரை சந்தித்தது தொடர்பாகவும் அப்போது அவர் பிரதேச சபையால் அனுப்பப்பட்ட ஆவணங்களினை ஆராய்ந்தபோது உள்ளூராட்சி மன்றங்களின் சட்ட அடிப்படையில் ஒருவருக்கு மட்டுமே வழங்க முடியும் என்பது தொடர்பாக விளக்கமளித்தது பற்றி சபைக்கு

அறியப்படுத்தியதுடன் இதன்போது கடைகளை நடாத்தியவர்களும் உடன் இருந்ததாக தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்கள் தம்மிடம் உள்ள ஆவணங்களை உள்ளூராட்சி ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன்பின்னர் கிடைக்கப்பெறும் முடிவின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் Allai Vila நிறுவனத்தால் சபையின் அனுமதி இன்றி கட்டப்பட்ட அத்திவாரத்துக்கான கட்டணம் கட்டப்பட்டதா? எனவும் கௌரவ தவிசாளர் கள விஜயம் செய்து பொது மக்களை அழைத்து கலந்துரையாடுமாறு சபையில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் கலந்துரையாடல் இடம்பெற்றதா? எனவும் வினாவெழுப்பினார். இதன்போது கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன் இதுவரை கட்டணம் செலுத்தப்படவில்லை எனவும் தெரிவித்ததுடன் இதற்கான அனுமதி தொடர்பாக பிரதேச செயலகத்தில் கூட்டம் இடம்பெற்றதாகவும் தெரிவித்தார்.

பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டம் தொடர்பாக சபையில் சிறிது நேரம் விவாதம் இடம்பெற்றதை தொடர்ந்து Allai Vila நிறுவனத்தினரையும் பொது அமைப்புக்களையும் அல்லைப்பிட்டி உப அலுவலகத்துக்கு அழைத்து கலந்துரையாடுவது என தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் வேலணைக்கான பொது மைதானத்துக்கு காணி பெறுவதன் நிலை தொடர்பாக வினாவெழுப்பியபோது பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் இன்றைய தினம் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளரால் குறித்த இடம் பார்வையிடப்படவுள்ளதாக தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் யசோதினி சாந்தகுமார் அவர்கள் வாழ்வாதார உதவிக்காக கோழிக் குஞ்சுகள் வழங்கும் வேலைத்திட்டத்தில் தான் முன்மொழிந்த பயனாளிக்கு வழங்காமல் வேறு பயனாளிக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சேபனை வெளியிட்டதை தொடர்ந்து குறித்த விடயம் பற்றி சபையில் வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டது.

கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் சபைக்குச் சொந்தமான குடிநீர் தொட்டி தாங்கி ஒன்று சபை உறுப்பினர் ஒருவரின் வீட்டில் நீண்டகாலமாக உள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து சபையில் சிறிது நேரம் அது தொடர்பாக விவாதம் இடம்பெற்றது. மேலும் அல்லைப்பிட்டி உப அலுவலக வளாகத்துக்கு வேலி அடைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டு அனலைதீவில் வைக்கப்பட்டுள்ள மின்கம்பங்கள் எப்போது கொண்டுவரப்படும் என வினாவெழுப்பியபோது அடுத்த கிழமையளவில் கொண்டு வரப்படும் என கௌரவ தவிசாளர் அவர்களால் பதிலளிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் சட்ட ஆலோசகரை நியமிக்குமாறு நீண்டகாலமாக தெரிவித்து வருகின்றபோதும் இன்னமும் நியமிக்கப்படவில்லை என ஆட்சேபனை வெளியிட்டதுடன் அவ்வாறு நியமிக்குமிடத்து சபையின் அறிவுறுத்தலையும் மீறி சாட்டியில் படகுச் சவாரியில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என தெரிவித்தார். அராலி வெளி இறால் பண்ணையாளர் தாம் சபையுடன் ஒப்பந்தம் செய்ய முடியாது என தெரிவித்ததை கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு அறியப்படுத்துமாறு தன்னால் ஏற்கனவே கூறப்பட்டதை நினைவுபடுத்தியதுடன் அவ்வாறு அவருக்கு அறியப்படுத்தி அனுமதியை இரத்துச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

சபையின் பெண் உறுப்பினர்களின் முன்மொழிவில் வாழ்வாதாரத்துக்காக மக்களுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டதில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக சபையில் குழப்ப நிலை ஏற்பட்டதால் கௌரவ தவிசாளரால் கூட்டமானது முற்பகல் 11.50 மணியளவில் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

தொடர்ந்து கூட்டமானது பிற்பகல் 12.00 மணியளவில் மீண்டும் ஆரம்பமானது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் வீதி பெயர் பலகைகளை புதிதாக செய்வதற்கு செலவு மதிப்பீடு அதிகம் உள்ளதால் அவற்றை வழங்குவதற்கு வர்த்தகர்கள் முன்வராதுள்ளதால் தற்போதுள்ள பெயர் பலகைகளை பயன்படுத்தி பெயர் பலகைகளை உருவாக்குவதற்கான முயற்சி எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். சாட்டி சுற்றுலா மையத்துக்கான மலசலகூடத்துக்கான நீர் விநியோகக் குழாய் உடைக்கப்பட்டிருப்பது பற்றியும் ஒழுங்காக நீர் விநியோகம் இடம்பெறாதது பற்றியும் ஆட்சேபனை வெளியிட்டதுடன் நீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்தி சுற்றுலாப்பயணிகளிடம் கட்டணத்தை அறவிட முடியும் என தெரிவித்தார். இங்கிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வெளியே கொண்டு செல்லப்படும் மீன்களுக்கு கட்டணம் அறவிட முடிமா? என்பதை ஆராயுமாறு தன்னால் ஏற்கனவே தெரிவித்ததை நினைவுபடுத்தியதுடன் அதனை அனைத்து பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். துறையூர் சந்தை கடைகளை நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு சபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி வினாவெழுப்பியபோது குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் மண்டைதீவு உப அலுவலகத்தில் தபால் அலுவலகம் இயங்குவதற்கும் தலைமை அலுவலகத்துக்கு உள்ளக தொலைபேசி அமைப்பு செய்வதற்கும் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக கேட்டறிந்தார். கட்டாக்காலிகளை பிடித்த வருமானத்தில் மரக்கறி பயிர்க் கன்றுகளை வழங்குவது பற்றி ஆராயுமாறு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி கேட்டறிந்தார். தொடர்ந்து மரக்கறி கன்றுகளை வழங்குவதற்கு எவ்வாறு பயனாளிகளை தெரிவு செய்வது? என சிறிது நேரம் விவாதம் இடம்பெற்றது.

தொடர்ந்தும் கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் I Road Project இல் வீதி புனரமைப்பு இடம்பெறும்போது கனரக வாகனங்கள் சென்றதால் சேதமடைந்த மண்கும்பான பாடசாலை வீதியை புனரமைப்பு செய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்புமாறு கடந்த கூட்டத்தில் தன்னால் தெரிவிக்கப்பட்டதை நினைவுபடுத்தியதுடன் குறித்த கடிதத்தை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். மேலும் மண்கும்பான் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு மைதானத்துக்கான காணி எப்போது கிடைக்கப்பெறும் என்பது தொடர்பாக கேட்டறிந்து கொண்டதுடன் எமது சபையின் எல்லைக்குள் உள்ள கடலட்டை பண்ணைகளின் விபரத்தை எடுக்குமாறு தெரிவித்து வருகின்றபோதும் அது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என ஆட்சேபனை தெரிவித்தார். வகைதொகை இன்றி கடலட்டை பண்ணைகள் வழங்கப்படுவதை நிறுத்துவதற்கு மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் கோரிக்கை வைக்குமாறு தெரிவித்து நாக விகாரை விகாராதிபதியை கடற்றொழிலாளர் சமாசத்தை சார்ந்தவர்கள் சந்தித்துள்ளதாக சபைக்கு அறியப்படுத்தியதுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கூட கடலட்டை பண்ணைகளின் விபரம் தெரியாதுள்ளதாக ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். செட்டிபுலத்தில் சீனா நாட்டவரின் முதலீட்டில் கடலட்டை பண்ணை அமைக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைப்பதாக சபைக்கு அறியப்படுத்தியதுடன் தாம் கடலட்டை பண்ணைக்கு எதிரானவர்கள் இல்லை என்றபோதும் பண்ணைகளை அமைப்பதற்கு வெளிப் பிரதேசத்தை சார்ந்தவர்களுக்கு அனுமதி வழங்காமல் தீவகத்தை சார்ந்தவர்களுக்கே அனுமதி வழங்கவேண்டும் என தெரிவித்தார். தீவகத்தில் கடலட்டை பண்ணை என்ற போர்வையிலே வெளிநாடு, வெளிப்பிரதேசத்தை சார்ந்தவர்கள் உள் நுழைந்து இங்குள்ள கடற்றொழிலாளர்களை பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக சுட்டிக்காட்டியதுடன் ஆகவே தீவகத்தில் வெளிநாடு, வெளிப்பிரதேசத்தை சார்ந்தவர்களுக்கு கடலட்டை பண்ணைக்கு அனுமதி வழங்க கூடாதென கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு கோரிக்கை வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடரந்து கௌரவ உறுப்பினர் சின்னையா சிவராசா அவர்கள் கடலட்டை பண்ணைக்கான அனுமதிக்கு கோரிக்கை வைப்பதாயின் சம்பந்தப்பட்ட கடற்றொழிலாளர் சங்கத்தின் அனுமதியை பெறுவதுடன் அவர்களுக்கான வருமானத்தையும் உறுதிப்படுத்த வேண்டுமென கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெளிவாக கூறியுள்ளதாக தெரிவித்தார். தீவகத்தில் உள்ள பல கடற்றொழிலாளர் சங்கங்கள் கடலட்டை பண்ணைக்கான அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். இதன்போது சபை உறுப்பினர்களுக்கு இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

தொடர்ந்து 20.10.2022 ஆம் திகதி இடம்பெற்ற மாதாந்த கூட்ட அறிக்கையானது கௌரவ உறுப்பினர் பிலிப் பிரான்சிஸ் அவர்களால் முன்மொழியப்பட்டு கௌரவ உறுப்பினர் எட்வர்ட் மேரி அலன் அவர்களால் வழிமொழியப்பட்டு சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கான சபையின் தழுவல் அனுமதியை எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட கீழ்வரும் கொடுப்பனவுகள் தொடர்பாக சபையில் அறியத்தரப்பட்டு கௌரவ உறுப்பினர் அருளானந்தம் ஸ்ரீபத்மராசா அவர்களால் முன்மொழியப்பட்டு கௌரவ உறுப்பினர் யசோதினி சாந்தகுமார் அவர்களால் வழிமொழியப்பட்டு சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

| இல | திகதி | யாருக்கு | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 04.10.2022 | பொ.நடனசிகாமணி | கௌரவ உப தவிசாளருக்கான செப்ரெம்பர் மாத தொலைபேசிப் படி | 1,000.00 |
| 2 | 06.10.2022 | செயலாளர் பிரதேச சபை வேலணை | அவசர நெருக்கடிக்கு பதிலளிப்பதற்கான தேவைகளை அடையாளம் காணல் பயிற்சி பட்டறைக்கான செலவுகளுக்குரிய முற்பணம் பெற்ற வகையால் | 94,000.00 |
| 3 | 06.10.2022 | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் | யூலை- செப்ரெம்பர் வரையான முத்திரைத் தீர்வைக் கட்டணம் செலுத்திய வகையால் | 6,725.00 |
| 4 | 11.10.2022 | பொ.ஜெகதீஸ்வரன் | அல்லைப்பிட்டி பொது நூலகத்தின் செப்ரெம்பர் மாத பத்திரிகைக்கான கொடுப்பனவு | 3,080.00 |
| 5 | 11.10.2022 | பொ.ஜெகதீஸ்வரன் | வேலணை பொது நூலகத்தின் செப்ரெம்பர் மாத பத்திரிகைக்கான கொடுப்பனவு | 6,770.00 |
| 6 | 11.10.2022 | கை.ஸ்ரீஸ்காந்தன் | நயினாதீவு பொது நூலகத்தின் செப்ரெம்பர் மாத பத்திரிகைக்கான கொடுப்பனவு | 3,080.00 |
| 7 | 11.10.2022 | பூபாலசிங்கம் புத்தகசாலை | மண்டைதீவு பொது நூலகத்தின் செப்ரெம்பர் மாத பத்திரிகைக்கான கொடுப்பனவு | 3,680.00 |
| 8 | 11.10.2022 | கிரிசாந் காட்வெயர்ஸ் | தலைமை அலுவலக நீர் தாங்கி வாகனத்திற்கு Tube பொருத்திய வகையால் | 380.00 |
| 9 | 11.10.2022 | North link engineering | வேலணை உப அலுவலக பாவனைக்கு Toner கொள்வனவு செய்த வகையால் | 30,287.54 |
| 10 | 11.10.2022 | இ.காயத்திரி | வேலணை உப அலுவலக பயன்பாட்டிலுள்ள RB-9312 இலக்க வாகனத்திற்கு பான்வெளிட் கொள்வனவு செய்த வகையால் | 3,000.00 |
| 11 | 11.10.2022 | இ.காயத்திரி | புங்குடுதீவு உப அலுவலக பயன்பாட்டிலுள்ள RB-9150 இலக்க வாகனத்திற்கு மீற்றர் பொருத்திய வகையால் | 8,400.00 |
| 12 | 11.10.2022 | கா.வசந்தி | வேலணை உப அலுவலக பயன்பாட்டிலுள்ள RB-4191 இலக்க வாகனத்திற்கு ரயர் ஒட்டிய வகையால் | 1,000.00 |
| 13 | 11.10.2022 | தபால் மா அதிபர் | எமது சபையின் செப்ரெம்பர் மாத தபால் கட்டணம் | 3,570.00 |
| 14 | 11.10.2022 | முகாமையாளர் வேலணை ப.நோ.கூ.ச | புங்குடுதீவு கண்ணகி நீர் சுத்திகரிப்பு நிலைய முன்பக்க படலை அமைக்கும் முகமாக பொருட்கள் கொள்வனவு செய்த வகையால் | 3,200.00 |
| 15 | 11.10.2022 | முகாமையாளர் வேலணை ப.நோ.கூ.ச | எமது சபை வாகனங்களின் செப்ரெம்பர் மாத எரிபொருள் கொடுப்பனவு | 94,600.00 |
| 16 | 11.10.2022 | முகாமையாளர் புங்குடுதீவு ப.நோ.கூ.ச | நயினாதீவு உப அலுவலக வாகனங்களின் செப்ரெம்பர் மாத எரிபொருள் கொடுப்பனவு | 47,500.00 |
| 17 | 12.10.2022 | கை.ஸ்ரீஸ்காந்தன் | புங்குடுதீவு பொது நூலகத்தின் செப்ரெம்பர் மாத பத்திரிகைக்கான கொடுப்பனவு | 3,080.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | 13.10.2022 | இ.காயத்திரி | வேலணை உப அலுவலக பயன்பாட்டிலுள்ள RX-9425 இலக்க நீர் தாங்கிக்கு குட்டித்துலா பொருத்திய வகையால் | 16,000.00 |
| 19 | 17.10.2022 | யாழ் மாவட்ட கூட்டுறவு சபை | தலைமை அலுவலக எல்லைக்ககுள் இயங்கும் வாகனத் தரிப்பிடங்களுக்கு பற்றுச்சீட்டு கொள்வனவு செய்த வகையால் | 4,250.00 |
| 20 | 17.10.2022 | தபால் மா அதிபர் | எமது சபையின் மோட்டார் அறையின் ஜனவரி, பெப்ரவரி மாத மின் கட்டணம் | 480.00 |
| 21 | 17.10.2022 | கிரிசாந் காட்வெயர்ஸ் | எமது சபையன் வேலணை உடற்பயிற்சி நிலையத்தின் கதவு திருத்திய வகையால் | 4,200.00 |
| 22 | 17.10.2022 | கிரிசாந் காட்வெயர்ஸ் | குறிகட்டுவான் இறங்குதறை நீர்த்தாங்கிக்கு Tube வாங்கிய வகையால் | 450.00 |
| 23 | 17.10.2022 | முகாமையாளர் வலம்புரி | கட்டாக்காலி மாடு பகிரங்க ஏல விளம்பரம் செய்த வகையால் | 2,530.00 |
| 24 | 17.10.2022 | பொருளாளர் ஊழியர் நலன்புரி சங்கம் | கட்டாக்காலி மாடு பகிரங்க ஏல விற்பனை வரையான பராமரிப்பு செலவினம் | 6,900.00 |
| 25 | 17.10.2022 | அஸ்வின் பான்சி | அலுவலக பாவனைக்கு காகிதாகிகள் கொள்வனவு செய்த வகையால் | 170.00 |
| 26 | 17.10.2022 | Chief Accountant Srilanka Railway | உத்தியோகத்தர்களிற்கான புகையிரத ஆணைச்சீட்டு கொடுப்பனவு | 39,200.00 |
| 27 | 17.10.2022 | மருதா ரபர் சீல் | தலைமை அலுவலக செயலாளர் அவர்களின் பதவி முத்திரை பெற்றுக் கொண்ட வகையால் | 2,800.00 |
| 28 | 17.10.2022 | தபால் மா அதிபர் | புங்குடுதீவு உப அலுவலக பகுதியில் உள்ள PILGRIM HOUSE இன் ஏப்ரல் மாத மின்கட்டணம் | 240.00 |
| 29 | 17.10.2022 | தபால் மா அதிபர் | புங்குடுதீவு உப அலுவலக பகுதியில் உள்ள BECON LIGHT இன் ஏப்ரல் மாத மின்கட்டணம் | 240.00 |
| 30 | 17.10.2022 | தபால் மா அதிபர் | புங்குடுதீவு உப அலுவலக பகுதியில் உள்ள PILGRIM HOUSE இன் மே மாத மின்கட்டணம் | 240.00 |
| 31 | 17.10.2022 | தபால் மா அதிபர் | புங்குடுதீவு உப அலுவலக பகுதியில் உள்ள PILGRIM HOUSE இன் யூன் மாத மின்கட்டணம் | 240.00 |
| 32 | 17.10.2022 | தபால் மா அதிபர் | புங்குடுதீவு உப அலுவலக பகுதியில் உள்ள PILGRIM HOUSE இன் யூலை மாத மின்கட்டணம் | 240.00 |
| 33 | 17.10.2022 | தபால் மா அதிபர் | புங்குடுதீவு உப அலுவலக பகுதியில் உள்ள BECON LIGHT இன் யூலை மாத மின்கட்டணம் | 240.00 |
| 34 | 18.10.2022 | அ.டிக்சன் | எமது சபையின் பயன்பாட்டிலுள்ள RB-3943 இலக்க ரக்டர் வாகனத்திற்கு வரி அனுமதி பத்திரம் பெற்ற வகையால் | 900.00 |
| 35 | 18.10.2022 | இ.காயத்திரி | வேலணை உப அலுவலக பாவனையிலுள்ள RX-9425 இலக்க நீர் தாங்கிக்கு ரேசர் மாற்றிய வகையால் | 1,400.00 |
| 36 | 18.10.2022 | முகாமையாளர் வலம்புரி | கட்டாக்காலி பகிரங்க ஏல விற்பனையினை விளம்பரம் செய்த வகையால் | 3,375.00 |
| 37 | 18.10.2022 | தபால் மா அதிபர் | மண்டைதீவு உப அலுவலகத்தின் செப்ரெம்பர் மாத மின் கட்டணம் | 1,735.00 |
| 38 | 18.10.2022 | செயலாளர் பிரதேச சபை வேலணை | கட்டாக்காலி ஏலத்தில் பங்குபற்றுவதற்காக செலுத்தப்படும் மீளளிக்க முடியாத வைப்புத் தொகையினை சபையின் வருமானத்திற்கு மாற்றிய வகையால் | 12,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 39 | 18.10.2022 | முகாமையாளர் அன்னை சீ புட் | நயினாதீவு மரக்கறி சந்தை மற்றும் செட்டிபுலம் மீன் சந்கைக்கான கேள்வி வைப்பு மீளளித்த வகையால் | 10,000.00 |
| 40 | 18.10.2022 | செயலாளர் பிரதேச சபை வேலணை | பண்டிகை முற்பணம் | 240,000.00 |
| 41 | 19.10.2022 | முகாமையாளர் வேலணை ப.நோ.கூ.ச | வேலணை பல நோக்கு கூட்டுறவு சங்கம் மூலம் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களுக்கான செப்ரெம்பர் மாத கொடுப்பனவு | 51,060.00 |
| 42 | 19.10.2022 | ம.பிரசாந்தன் | தலைமை அலுவலகத்திற்குத் தேவையான பதிவேட்டுப் புத்தகம் கொள்வனவு செய்த வகையால் | 984.85 |
| 43 | 19.10.2022 | தெ.பாலதாஸ் | 28.09.2022 அன்று நடைபெற்ற கட்டட விண்ணப்ப பரிசீலனை கூட்டத்தின் உபசரணைச் செலவு மீளித்த வகையால் | 1,480.00 |
| 44 | 19.10.2022 | பு.கஜேந்திரன் | ஆகஸ்ட் மாத பிரயாணப் படி | 5,000.00 |
| 45 | 19.10.2022 | பு.கஜேந்திரன் | செப்ரெம்பர் மாத பிரயாணப் படி | 5,000.00 |
| 46 | 19.10.2022 | ந.சுரெஸ்குமார் | மேலதிக நேர வேதனம் (ஆகஸ்ட் -40 மணித்தியாலங்கள்) | 4,333.00 |
| 47 | 19.10.2022 | தபால் மா அதிபர் | எமது சபையின் செப்ரெம்பர் மாத தொலைபேசி கட்டணம் | 13,934.62 |
| 48 | 21.10.2022 | செயலாளர் பிரதேச சபை வேலணை | உத்தியோகத்தர்களற்கான அக்டோபர் மாத சம்பளக் கொடுப்பனவு | 3,657,183.83 |
| 49 | 21.10.2022 | செயலாளர் பிரதேச சபை வேலணை | அபிவிருத்தி உத்தியோகத்தர்களற்கான அக்டோபர் மாத சம்பளக் கொடுப்பனவு | 561,480.00 |
| 50 | 21.10.2022 | தவிசாளர் பிரதேச சபை வேலணை | அக்டோபர் மாத உறுப்பினர் படி | 315,000.00 |
| 51 | 26.10.2022 | க.பிரசாந்தன் | முற்றவெளிச் சந்தை சிற்றுண்டிச்சாலை ஜன்னல் கதவு பூட்டிய கூலி கொடுத்த வகையால் | 2,300.00 |
| 52 | 26.10.2022 | TCT Multi Traders | தலைமை அலுவலக பாவனைக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்த வகையால் | 4,340.00 |
| 53 | 26.10.2022 | North link engineering | நயினாதீவு உப அலுவலக கணினிக்கு Toner கொள்வனவு செய்த வகையால் | 35,700.00 |
| 54 | 26.10.2022 | Nalin Information Technology | அலுவலக பாவனைக்கு UPS கொள்வனவு செய்த வகையால் | 40,500.00 |
| 55 | 26.10.2022 | Nalin Information Technology | அலுவலக பாவனைக்கு UPS கொள்வனவு செய்த வகையால் | 40,500.00 |
| 56 | 26.10.2022 | செயலாளர் பிரதேச சபை வேலணை | குடி மக்கள் பட்டயம் தயாரிப்பது தொடர்பான பட்டறைக்கான உபசரணைச் செலவு | 29,400.00 |
| 57 | 26.10.2022 | தலைவர் ஸ்ரீமுருகன் சன சமுக நிலையம் | சபைநிதி -2021 வேலைத் திட்ட முடிப்பிள்ளையார் வீதி திருத்தம் | 299,983.00 |
| 58 | 26.10.2022 | தலைவர் ஸ்ரீமுருகன் சன சமுக நிலையம் | சபைநிதி -2022 வேலைத் திட்ட கைத்தனை 5ம் ஒழுங்கை வீதி திருத்தம் | 329,427.84 |
| 59 | 26.10.2022 | தெ.பாலதாஸ் | இடர் கடன் | 250,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 60 | 26.10.2022 | பிராந்திய முகாமையாளர் தேசிய நீர் வழங்கல் | Ro--Plant முலமான குடிநீர் கொடுப்பனவு | 1,866.45 |
| 61 | 26.10.2022 | S,M Thash Farm | CDLG திட்டத்தின் கீழ் UNDP நீறுவனம் முலம் கோழிக் குஞ்சு உபகரணம் வழங்கிய கொடுப்பனவு | 386,000.00 |
| 62 | 26.10.2022 | சி.கௌரிசங்கர் | அவசர நெருக்கடிக்கு பதிலளிப்பகதற்கான தேவைகளை அடையாளம் காணல் பயிற்சி பட்டறைக்கு காகிதாகிகள் கொள்வனவு செய்த கொடுப்பனவு | 4,220.00 |
| 63 | 28.10.2022 | முகாமையாளர் இலங்கை வங்கி | எமது சபையின் செப்ரெம்பர், அக்டோபர் மாதங்களுக்கான குடிநீர் கட்டணம் | 3,896.20 |
| 64 | 28.10.2022 | முகாமையாளர் வலம்புரி | கட்டாக்காலி பகிரங்க ஏல விற்பனையினை விளம்பரம் செய்த வகையால் | 2,812.50 |
| 65 | 28.10.2022 | து.முகுந்தன் | 3ம் காலாண்டு கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கான உபசரணை செலவு | 950.00 |
| 66 | 28.10.2022 | கு.நாகதர்சன் | தலைமை அலுவலக பாவனைக்கு Router கொள்வனவு செய்த வகையால் | 8,040.00 |
| 67 | 28.10.2022 | தபால் மா அதிபர் | அல்லைப்பிட்டி உப அலுவலகத்தின் செப்ரெம்பர் மாத மின் கட்டணம் | 1,710.00 |
| 68 | 28.10.2022 | முகாமையாளர் வலம்புரி | மண்டைதீவு ECO -Tourism கேள்வி அறிவித்தலை விளம்பரம் செய்த வகையால் | 14,250.00 |
| 69 | 28.10.2022 | Ark Enterprises | புங்குடுதீவு உப அலுவலக பாவனையிலுள்ள LO-2941 இலக்க நீர் தாங்கிக்கு கோஸ்பைப் பெற்ற வகையால் | 24,750.00 |
| 70 | 28.10.2022 | Ark Enterprises | புங்குடுதீவு உப அலுவலக பாவனையிலுள்ள LO-2941 இலக்க நீர் தாங்கிக்கு கோஸ்பைப் பொருத்தும் பொருட்கள் பெற்ற வகையால் | 1,930.00 |
| 71 | 28.10.2022 | ப.சுவிவர்ணன் | மேலதிக நேர வேதனம் (ஆகஸ்ட் - 35 மணித்தியாலங்கள்) | 3,791.00 |
| 72 | 28.10.2022 | I7 Computers | தலைமை அலுவலக பாவனைக்கு Mouse கொள்வனவு செய்த வகையால் | 4,000.00 |
| 73 | 28.10.2022 | யாழ் மாவட்ட கூட்டுறவு சபை | பதவியினர் கடன் பதிவேடு கொள்வனவு செய்த வகையால் | 4,400.00 |
| 74 | 31.10.2022 | சி.கௌரிசங்கர் | புங்குடுதீவு உப அலுவலக ஆயள்வேத வைத்தியசாலைக்கு Curtine கொள்வனவு | 2,500.00 |
| 75 | 31.10.2022 | கிரிசாந் காட்வெயர்ஸ் | புங்குடுதீவு உப அலுவலக ஆயுள்வேத வைத்தியசாலைக்கு பெயர் பலகை பொருத்திய வகையால் | 10,700.00 |

**தீர்மான இல 01/17.11.2022**

எமது சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 2022 ம் ஆண்டுக்கான சீருடைக்கான கொடுப்பனவை வழங்குவது என சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சின்னையா சிவராசா**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன்**

**தீர்மான இல 02/17.11.2022**

எமது சபையால் அறவிடப்படும் கட்டணங்களை கீழ்க் குறிப்பிட்டவாறு மாற்றம் செய்வது என சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| இல | விபரம் | பழைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|
| 1 | கட்டட விண்ணப்படிவக் கட்டணம் | 200.00 | 500.00 |
| 2 | குடியமர்வுச் சான்றிதழ் கட்டணம் (COC) | 300.00 | 500.00 |
| 3 | ஆதன உரிமச் சான்றிதழ் கட்டணம் | 100.00 | 500.00 |
| 4 | ஆதன சுவீகரிக்கப்பட்டமைக்கான சான்றிதழ் கட்டணம் | 100.00 | 500.00 |
| 5 | வீதி எல்லை சான்றிதழ் கட்டணம் | 300.00 | 500.00 |
| 6 | நூலக அங்கத்துவர் விண்ணப்பப் படிவக்கட்டணம் | 25.00 | 50.00 |
| 7 | நூலக அங்கத்துவ புதுப்பித்தல் கட்டணம் | 50.00 | 50.00 |
| 8 | நூலக அங்கத்துவ வைப்பு | - | 100.00 |
| 9 | படவரைஞரை பதிவு செய்வதற்கான விண்ணப்பபடிவ கட்டணம் | 200.00 | 500.00 |
| 10 | உத்தரவு பெற்ற நில அளவையாளராகப் பதிவு புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் | 750.00 | 1000.00 |
| 11 | சூழல் பாதுகாப்பு உரிம விண்ணப்பப்படிவ கட்டணம் | 300.00 | 500.00 |
| 12 | நெல்மூட்டை ஒன்று வெளியே கொண்டு செல்வதற்கான கட்டணம் | 10.00 | 25.00 |
| 13 | அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்களின் மேலதிக பிரதி வழங்குவதற்கான கட்டணம் | 150.00 | 250.00 |
| 14 | வாகனங்கள் வாடகைக்கு வடுவதற்கான விண்ணப்பபடிவக்கட்டணம் | 20.00 | 100.00 |
| 15 | துவிச்சக்கர வண்டி உரிமத்திற்கான விண்ணப்ப படிவக்கட்டணம் | 16.00 | 26.00 |
| 16 | மிருகவரி விண்ணப்பபடிவக்கட்டணம் | 18.00 | 45.00 |
| 17 | வியாபார உரிம விண்ணப்பபடிவக்கட்டணம் | 50.00 | 100.00 |
| 18 | பகிரங்க ஏலத்திற்கு வழங்கப்படும் கேள்விப்படிவத்திற்கான கட்டணம் | - | 500.00 |
| 19 | மயானக் கட்டணம் | 500.00 | 1000.00 |
| 20 | பகிரங்க ஏலத்திற்கு வழங்கப்படும் பங்குபற்றுவதற்கான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | - | 1,000.00 |

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் செல்லப்பா பார்த்தீபன்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் ஜனார்த்தனன்**

**தீர்மான இல 03/17.11.2022**

எமது பிரதேச சபையில் கடமையாற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் ஊழியர்களுக்கு 10 மாத இடர்கடன் வழங்குவதென சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

| **பெயர்** | **பதவி** | **தொகை** |
|---|---|---|
| ச.குலேந்திரன் | வேலை வெளிக்களத் தொழிலாளி | ரூபா 250,000.00 |
| சோ.குமரகுரு | பௌசர் கிளினர் | ரூபா 250,000.00 |

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் பாலச்சந்திரன் ஜனார்த்தனன்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் வல்லிபுரம் நாவேந்தன்**

**தீர்மான இல 04/17.11.2022**

எமது தலைமை அலுவலகத்திற்கு Zoom தொழில்நுட்பத்தினூடான கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சிகளினை மேற்கொள்வதற்குத் தேவையான கீழ் குறிப்பிடப்படும் பொருட்களை கொள்வனவு செய்வதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

1. Laptop-01
2. Roll plug -01
3. Multi Plug -02
4. projector stand - 01

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் அனுஷியா ஜெயகாந்த்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் வல்லிபுரம் நாவேந்தன்**

**தீர்மான இல 05/17.11.2022**

வேலணை வங்களாவடிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைத்தொகுதியினை ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்களுக்கே கட்டாயம் வழங்குவது எனவும் அதுவரை கடைத்தொகுதிக்கான கேள்விப்பத்திரங்கள் கோருவது இல்லை என்பதுடன் கௌரவ ஆளுநர் அவர்களால் கடையினை வழங்குவதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளவருக்கும் கடையினை வழங்குவதில்லை எனவும் எல்லோருக்கும் ஒரே நேரத்தில் கடைகள் வழங்கப்படவேண்டும் எனவும் இது சம்பந்தமாக மீண்டும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்படவேண்டும் என சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் அருளானந்தம் ஸ்ரீபத்மராசா**

**தீர்மான இல 06/17.11.2022**

2022 ம் ஆண்டு சபையால் எதிர்பார்க்கப்பட்டதற்கும் மேலதிகமாக கிடைத்த கீழ் குறிப்பிடப்படும் வருமானங்களில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும் மேலதிகமாக ஏற்பட்ட கீழ் குறிப்பிடப்படும் செலவுகளை மேற்கொள்வதென சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

| வருமான தலைப்பு | வருமான விபரம் | தொகை |
|---|---|---|
| 1.63 | முத்திரை தீர்வை | 2, 050,000.00 |
| | | **2, 050,000.00** |

| செலவின தலைப்பு | செலவின விபரம் | தொகை |
|---|---|---|
| 103(1) | காகிதாதிகள் மற்றும் எழுது பொருட்கள் | 100,000.00 |
| 103(1) | எரிபொருட்கள் | 400,000.00 |
| 103(9) | வழங்கு பொருட்கள் தேவைப்பாடுகளும் (ஏனையவை) | 200,000.00 |
| 203(9) | வழங்கு பொருட்கள் தேவைப்பாடுகளும் (ஏனையவை) | 200,000.00 |
| 603(9) | வழங்கு பொருட்கள் தேவைப்பாடுகளும் (ஏனையவை) | 250,000.00 |
| 109(1) | தளபாடங்கள் தட்டச்சுக்கள் மற்றும் பொருத்துக்கள் | 900,000.00 |
| | | **2,050,000.00** |

**முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் யசோதினி சாந்தகுமார்**

**வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சிவலிங்கம் அசோக்குமார்**

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சின்னையா சிவராசா அவர்கள் கடந்த கூட்ட அறிக்கையில் துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்துக்கு இனிமேல் ஒப்பந்தங்கள் எவையும் பிரதேச சபையால் வழங்கக்கூடாது என உறுப்பினர் ஒருவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்ததுடன் இவ்வாறான கருத்தை தெரிவித்து சனசமூக நிலையத்தை எதிர்காலத்தை கேள்விக்குறியாக்க கூடாது என தெரிவித்தார். ஆகவே கூட்ட அறிக்கையில் இருந்து குறித்த கருத்தினை நீக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதன்போது கௌரவ உறுப்பினர் தியாகராசா ஹேமதாஸ் அவர்கள் ஊரி வீதிக்கான வேலைத்திட்டத்தை சபையானது சனசமூக நிலையத்துக்கு பொருத்தமற்ற காலத்தில் வழங்கியமை, அதன் பின்னரான பொருளாதார நெருக்கடிகள் என்பனவே குறித்த சனசமூக நிலையத்தால் வேலைத்திட்டத்தை செய்ய முடியாமைக்கான காரணமாக உள்ளதாக தெரிவித்தார்.

வேலணையில் ஜிம் சென்ரர் பூட்டு உடைக்கப்பட்ட விடயம் தொடர்பாக சிறிது நேரம் விவாதம் இடம்பெற்றதை தொடர்ந்து கருத்து தெரிவித்த கௌரவ உறுப்பினர் கருணாகரன் நாவலன் அவர்கள் ஜிம் சென்ரர் இற்கு பொருத்தமான ஒருவரை பொறுப்பாக நியமிக்குமாறும் புங்குடுதீவு உப அலுவலகத்தில் ஜிம் சென்ரரை உருவாக்குமாறு நீண்ட காலமாக தன்னால் தெரிவிக்கப்பட்டு வரும் விடயத்தை நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் நயினாதீவு யாத்திரிகர் மடத்தை புனரமைக்க வேண்டுமென கோரிக்கை வைத்தார். CDLG திட்டத்தின்கீழ் மக்களுக்கு வாழ்வாதார உதவிக்காக தற்போதைய கால நிலையில் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டது பொருத்தமற்றதென தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் எட்வர்ட் மேரி அலன் அவர்கள் சாட்டி கடற் பகுதியில் இடம்பெறும் அதிவேக படகுச் சவாரியினை தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி கடற்றொழிலாளர்களால் வழங்கப்பட்ட கடிதத்தினை சபைக்கு அறியப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் சாட்டி மண்கும்பான் கடற்பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத படகுச் சவாரியினை தடுத்து நிறுத்துவது தொடர்பாக அப்பகுதி கடற்றொழிலாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் தானும் கலந்து கொண்டது தொடர்பாக சபைக்கு அறியப்படுத்தினார். ரில்க்கோ நிறுவனமானது பிரதேச சபையின் அறிவுறுத்தலையும் மீறி தற்போதும் படகுச் சவாரி செய்து வருவது தொடர்பாகவும் இதனால் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாகவும் சபைக்கு அறியப்படுத்தினார். சாட்டி சுற்றுலா மைய கடற்பகுதியில் பிரதேச சபைக்கான எல்லையை நிர்ணயிப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் இடம்பெற்று தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளதாக ஆட்சேபனை வெளியிட்டதுடன் எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் படகுச்சவாரி தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எடுத்திருக்க முடியும் என தெரிவித்தார். அத்துடன் சட்ட ஆலோசரகரை நியமனம் செய்திருந்தால்கூட சட்ட நடவடிக்கை எடுத்திருக்கலாம் என தெரிவித்ததுடன் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுமாக இருந்தால் படகுகளை பறிமுதல் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந் கௌரவ உறுப்பினர் எட்வர்ட் மேரி அலன் அவர்கள் தன்னால் முன்மொழியப்பட்ட வீதி ஒன்றில் வெள்ளம் தேங்கி நின்று வீதியால் பயணிப்போருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் உள்ளதாக சபைக்கு அறியப்படுத்தியதுடன் ஊரி ஏற்ற முடியாவிடின் வேறு ஏற்பாடுகள் செய்து வீதியில் உள்ள பள்ளங்களை நிரப்புமாறு கேட்டுக்கொண்டார். அல்லைப்பிட்டி பாடசாலை ஒன்றில் குப்பைகள் தேங்கியுள்ளதாகவும் குப்பை ரக்டர் அல்லைப்பிட்டிக்கு வரும்போது அதனை ஏற்றிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். தனது முன்மொழிவில் கொள்வனவு செய்யப்பட்ட வீதி விளக்குகளை பொருத்தி தருமாறு கேட்டுக்கொண்டார். மாதர் சங்கத்துக்கு சொந்தமான காணியில் கட்டடம் அமைக்க உள்ளதாகவும் அதற்கான நடைமுறைகள் தொடர்பாக கேட்டறிந்தார். அல்லைப்பிட்டி ஊடாக அரச பேரூந்து சேவையை ஒழுங்கு செய்து தருமாறு தன்னால் நீண்ட காலமாக கேட்கப்பட்டு வருவதன் நிலை தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் உறுப்பினர்கள் தமது 2023 ம் ஆண்டுக்கான தமது முன்மொழிவை இம்மாதம் 30 ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். இதன்போது பல உறுப்பினர்கள் தமது 2020, 2021 ம் ஆண்டுக்கான முன்மொழிவு வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாதுள்ளதாக ஆட்சேபனை வெளியிட்டனர்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் பிலிப் பிரான்சிஸ் அவர்கள் ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி ஒருவர் தமது வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி சென்றபோது ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக தம்மிடம் தெரிவித்த கருத்தினை சபைக்கு அறியப்படுத்தினார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் தியாகராசா ஹேமதாஸ் அவர்கள் தனது மற்றும் கௌரவ உறுப்பினர் பா.ஜனார்த்தனன் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று துறையூர் முருகன் ஆலய சூழலில் பழுதடைந்த வீதி விளக்குகளை திருத்தியமைக்கு நன்றி தெரிவித்ததோடு தமது வட்டாரத்தில் பெருமளவான வீதி

விளக்குகள் திருத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். உறுப்பினர்களின் முன்மொழிவு வேலைத்திட்டங்கள் காலதாமதமாக ஆரம்பிப்பதாலேயே அவற்றை செய்து முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியதோடு இனிமேலாவது அவற்றை விரைவாக செய்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சிவலிங்கம் அசோக்குமார் அவர்கள் புளியங்கூடல் அம்மன் வீதியில் சிறியளவான பகுதி புனரமைக்கப்படாமல் பள்ளமாக இருப்பதாகவும் அதனை சபையானது நிரப்பித் தரவேண்டும் என கேட்டுக்கொண்டார். கைத்தனை வீதியில் வெள்ளம் செல்வதற்காக வெட்டப்பட்ட பகுதி இன்னமும் முழுமையாக புனரமைக்கப்படாதுள்ளதாக சபைக்கு அறியப்படுத்தினார். மேலும் கனரக வாகனங்கள் சென்றதால் சேதமாக்கப்பட்ட தாமோதரம் வீதியை புனரமைக்குமாறு நீண்ட காலமாக தெரிவித்தும் புனரமைக்கப்படாதுள்ளதாக ஆட்சேபனை வெளியிட்டார். வேலணை மத்திய கல்லூரி பிரதான வீதியில் இரவு நேரங்களில் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு மாடுகள் படுத்திருப்பதாகவும் அவற்றை பிடிக்க வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் கருணாகரன் நாவலன் அவர்கள் வட மாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் காணி சுவீகரிப்பு உள்ளிட்ட விடயங்களில் தான்தோன்றித்தனமாக செயற்படுவதாக சபைக்கு விளக்கமளித்ததுடன் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். வங்களாவடி கடைத் தொகுதி தீர்மானம் தொடர்பாக சந்திப்பதற்கு கௌரவ ஆளுநர் நேரம் ஒதுக்கி தந்தும்கூட அன்றைய தினம் அவர் இல்லாததால் கௌரவ ஆளுநரின் செயலாளருடனே சந்திப்பு இடம்பெற்றதை சுட்டிக்காட்டியதுடன் இவ்வாறான மக்களின் விடயங்களுக்கு ஒத்துழைக்காமல் பாதுகாப்பு தரப்பினரின் செயற்றிட்டங்களுக்கு தனது முழு அதிகாரத்தை கௌரவ ஆளுநர் பயன்படுத்துவதாக தெரிவித்தார். போதைவஸ்து பாவனை அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டியதுடன் போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வினை பிரதேச சபையானது செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். இளைஞர்களின் செயற்பாடுகளை மழுங்கடிக்கும் நோக்குடன் நீண்டகால திட்டமிடலாக போதைப்பொருளுக்கு அடிமையாக்கும் செயற்பாடு பாதுகாப்பு தரப்பினராலும் அதிகாரிகளாலும் செய்யப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியதுடன் வட மாகாணத்தில் அதிகாரிகளை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தில் உள்ள கௌரவ ஆளுநர் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்தார். இவ்வாறான விடயங்களின் அடிப்படையிலேயே கண்டனத் தீர்மானத்தை கொண்டு வருவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் கணபதிப்பிள்ளை வசந்தகுமாரன் அவர்கள் குறிகட்டுவானில் ஒழுங்கையினை மறித்து கடை கட்டப்பட்டுள்ள விடயம் பற்றி சபைக்கு அறியப்படுத்தியதுடன் அது தொடர்பாக சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் அதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் அனுஷியா ஜெயகாந்த் அவர்கள் ஜிம் சென்ரர் பூட்டு உடைக்கப்பட்ட விடயம் தொடர்பாக கேட்டறிந்தார். வேலணை பொதுச் சந்தையில் இயங்காமல் உள்ள மரக்கறி சந்தையினை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். பிரதேச சபையால் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்படும் விடயத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். தீவக பாடசாலைகள் சிலவற்றிலேயே போதைப் பொருள் பாவனை உள் நுழைந்துள்ளதாகவும் இவை தொடர்பாக பொது அமைப்புக்கள் எதுவித காத்திரமான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தவில்லை என சுட்டிக்காட்டியதுடன் போதைப் பொருள் விழிப்புணர்வு தொடர்பாக சபையால் செய்யக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என தெரிவித்தார். ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரியால் கூறப்பட்டதாக கௌரவ உறுப்பினர் பி.பிரான்சிஸ் அவர்களால் தெரிவிக்கப்பட்ட விடயம் தொடர்பாக பதிலளித்தார். சமூக வலைத்தளம் ஒன்றில் உறுப்பினர் ஒருவரால் பெண் உறுப்பினர்களின் செயற்பாடு தொடர்பாக வெளியிட்ட கருத்தை சபைக்கு அறியப்படுத்தியதுடன் அதற்கான கண்டனத்தை வெளியிட்டார். தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பாக சபையில் சிறிது நேரம் விவாதம் இடம்பெற்று சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் சபை உறுப்பினர் ஒருவர் குடிநீர் தொட்டி தாங்கி நீண்டகாலமாக தனது வீட்டில் பாவித்து வருவதாகவும் வேலணை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அலுவலகத்தில் குடிநீர் தொட்டி மற்றும் அதற்கான தாங்கி என்பன நீண்டகாலமாக உள்ளதாக ஆட்சேபனை வெளியிட்டதுடன் அதுபற்றிய விபரங்களையும் கேட்டறிந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட கௌரவ உறுப்பினர் சின்னையா சிவராசா அவர்கள் வேலணை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி அலுவலகத்தில் கௌரவ தவிசாளர் தங்கியிருந்தபோது அவரது தேவைக்காகவே குடிநீர் தொட்டி மற்றும் தாங்கி கொண்டு வரப்பட்டதாகவும் தற்போது அதனை மீள எடுக்க முடியும் என தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து குறித்த விடயங்கள் பற்றி சபையில் சிறிது நேரம் விவாதம் இடம்பெற்று குழப்ப நிலை ஏற்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் நவம்பர் 27 நினைவேந்தல் தினத்தில் நினைவேந்தல் ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் பிரதேச சபையானது சாட்டியில் குடிநீர் தாங்கி வைத்து குடிநீரை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் ரில்க்கோ ஹோட்டல் இற்கான வியாபார அனுமதி தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார். வீதிகளில் திரியும் மாடுகள், ஆடுகள் என்பவற்றை முதலாவது கட்டமாக அடுத்த மாதத்துக்கு முன்னர் பிடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் வரதராசா கஜீபன் அவர்கள் வேலணை வைத்தியசாலைக்கு பின்பாக உள்ள பற்றைக்காணிக்கு தன்னால் கடந்த கூட்டத்தில் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் ஒட்டப்பட்டதற்கு நன்றி தெரிவித்தார். வங்களாவடி கடைத்தொகுதி ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்களுக்கே கிடைப்பதற்கான காத்திரமான நடவடிக்கை

மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார். ரோக்கியோ சுப்பர் சீமென்ற் நிறுவனத்தினர் பிரதேச சபைக்கான அறிவித்தல் பலகைகள், மறியல் வேலிகள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்குவதற்கு ஆர்வமாக உள்ளதாக தெரிவித்தார். சாட்டியில் சபைக்குச் சொந்தமான காணியில் இராணுவத்தினரால் சட்ட விரோதமாக மண் அகழப்படுவது தொடர்பாக சபைக்கு அறியப்படுத்தினார். இதன்போது சபையின் காணிக்குள் இராணுவத்தினரால் மண் அகழப்படுவது பற்றி பிரதேச செயலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்குமாறு கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் அவர்கள் அல்லைப்பிட்டி உப அலுவலகத்தால் நடாத்தப்படும் வாசிப்பு மாத நிகழ்வுகளில் மண்கும்பான் பாடசாலை புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் மண்கும்பான் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லைப்பிட்டி உப அலுவலகத்துக்கு செல்வதில்லை எனவும் ஆட்சேபனை வெளியிட்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் மேரி மற்றில்டா அவர்கள் 2021 ம் ஆண்டுக்கான தனது ஊரி வீதி வேலைத்திட்டம் செய்யப்படாதது தொடர்பாகவும் வங்களாவடி கடைத்தொகுதி ஏற்கனவே கடைகளை நடாத்தியவர்களுக்கு இன்னமும் வழங்கப்படாதுள்ளது தொடர்பாகவும் கடுமையான ஆட்சேபனையை பதிவு செய்தார். மண்டைதீவில் ஆடுகள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளதாகவும் அவற்றை பிரதேச சபையானது உடனடியாக பிடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார். மண்டைதீவில் பழுதடைந்துள்ள வீதி விளக்குகளை திருத்தி தருமாறு கேட்டிருந்தும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளதாகவும் ஆட்சேபனை வெளியிட்டார். மண்டைதீவு பாடசாலை குப்பை ஏற்றப்படாதுள்ளதாக தெரிவித்தபோது குப்பைகளை பைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்தால் எமது சபையின் குப்பை ரக்டர் மண்டைதீவு செல்லும்போது குப்பைகளை எடுக்க முடியும் என செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் செல்லப்பா பார்த்தீபன் அவர்கள் 2021, 2022 ம் ஆண்டுகளுக்கான தமது முன்மொழிவு வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாதுள்ளதாக தெரிவித்ததுடன் அதற்கான மாற்று நடவடிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். இதன்போது செய்யப்படாதுள்ள 2021 ம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களுக்கான மாற்று ஏற்பாடு பற்றி சபை உறுப்பினர்களால் கலந்துரையாடப்பட்டது. இதன்போது முடிவடையாதுள்ள சபையின் 2021, 2022 ம் ஆண்டுகளுக்கான வேலைகளுக்கு பொருத்தமான காரணங்களை தெரிவித்து கால நீடிப்பை கேட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு கடிதம் அனுப்புவது என சபையால் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் செல்லப்பா பார்த்தீபன் அவர்கள் சாட்டி இந்து மயானத்துக்கு மின் இணைப்பை பெற்றுத் தருமாறு தம்மால் வைக்கப்பட்ட கோரிக்கையின் தற்போதைய நிலை பற்றி வினாவெழுப்பியதுடன் மின் இணைப்பை பெற்றுத்தரும் பட்சத்தில் தம்மால் மின் விளக்குகளை பொருத்துவதற்கான ஏற்பாட்டை செய்ய முடியும் என தெரிவித்தார். சாட்டியில் சட்ட விரோதமாக மண் ஏற்றப்படும் சபையின் காணியை குத்தகைக்கு

பெற்றுக்கொள்வதாயின் தமக்கு பத்து வருடங்கள் போதாது என அதனை குத்தகைக்கு கேட்டவர்கள் கூறியுள்ளதாகவும் ஆகவே சபையானது காலத்தை அதிகரித்து வழங்க முடியுமா? என்பது பற்றியும் இல்லையெனின் சபை காணியை துப்புரவாக்கி பாதுகாக்க முடியுமா? என்பது பற்றி வினாவெழுப்பியதுடன் தற்காலிகமாக காவலாளியை நியமிப்பது பற்றியும் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் அருளானந்தம் ஸ்ரீபத்மராசா அவர்கள் கௌரவ உறுப்பினர் க.நாவலன் அவர்களால் முன்மொழியப்பட்ட கௌரவ ஆளுநர் தொடர்பான தீர்மானத்துக்கு தான் ஆதரவு வழங்குவதாக தெரிவித்ததுடன் போதைப்பொருள் தொடர்பாகவும் சபையின் சட்ட வரம்புக்கு உட்பட்டு எடுக்க கூடிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். கட்டாக்காலி கால்நடைகளை பிடித்து இம்முறையாவது மாடுகள் பயிர்களை நாசம் செய்வதை தடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மண்டைதீவு ECO Beach இனை விரைவாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சின்னையா சிவராசா அவர்கள் சபையின் சந்தைகள், கடைகள் கேள்வி கோரலில் எடுக்கப்படாதவிடத்து அது அமைக்கப்பட்ட நோக்கத்தை விடுத்து வருமானம் பெறக்கூடிய வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியும் என உள்ளூராட்சி ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டியதுடன் எமது சபைக்குச் சொந்தமான கேள்வி கோரலில் எடுக்கப்படாத சந்தைகள், சந்தைக் கடைகள் என்பவற்றையும் அவ்வாறு பயன்படுத்த முடியும் என தெரிவித்தார். சபை உறுப்பினர்கள் தமது முன்மொழிவாக ஊரி வீதி, வீதி விளக்குகள் என்பவற்றுக்கு பதிலாக பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை செய்வது பொருத்தமானது என தெரிவித்ததுடன் சபையின் தீர்மானத்தின் மூலம் அதனை செய்ய முடியும் என தெரிவித்தார். துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்துக்கு ஒப்பந்தங்கள் வழங்க கூடாது என சபையில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்தை ஏற்க முடியாது என தெரிவித்ததுடன் அதனை கூட்ட அறிக்கையிலிருந்து நீக்க வேண்டும் என தெரிவித்தார். வங்களாவடி சந்தி பகுதியினை பிரதேச சபையானது தற்போது துப்புரவாக வைத்திருப்பதாக தெரிவித்ததுடன் வேலணை வைத்தியசாலை வரை துப்புரவாக்கும் செயற்பாட்டை செய்ய வேண்டும் என தெரிவித்தார். வேலணை வைத்தியசாலை பகுதிக்கு மின் விளக்குகள் பொருத்தி தருமாறு அதன் நிர்வாகத்தினர் சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை வைத்துள்ளதாக சுட்டிக்காட்டியதுடன் அதனை கட்டாயம் செய்து கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அத்துடன் வைத்தியசாலையின் வளாகத்தினுள் நோயாளர்காவு வண்டி சென்று வருவதற்கு ஏதுவாக வீதிகள் புனரமைக்கப்பட்டு மிகுதியாக உள்ள கற்கள் உள்ளிட்ட வளங்களை பயன்படுத்தி சபையானது பாதையை அமைத்துக் கொடுக்க முடியும் என தெரிவித்தார்.

பின்னர் செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டமானது பிற்பகல் 02.30 மணிக்கு நிறைவுபெற்றது.

| | |
|---|---|
| தவிசாளர், | செயலாளர், |
| பிரதேச சபை, | பிரதேச சபை, |
| வேலணை. | வேலணை. |